செய்தி வெளியீடு எண்: 704 நாள்:17.10.2019

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் மாண்புமிகு கேரளா முதலமைச்சர் அவர்களுக்கும் இடையே 25.9.2019 அன்று திருவனந்தபுரத்தில், தமிழ்நாடு – கேரளா மாநிலங்களுக்கிடையேயுள்ள நதி நீர் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதற்கு பேச்சுவார்த்தை நடைபெற்றது.

இப்பேச்சுவார்தையின் முடிவில், பரம்பிக்குளம்–ஆழியாறு திட்ட ஒப்பந்த மறு ஆய்வு மற்றும் அதனைச் சார்ந்த இனங்கள் குறித்து ஒரு குழுவும் மற்றும் பாண்டியாறு–புன்னம்புழா திட்டத்தினை செயல்படுத்துவது குறித்து மற்றும் ஒரு குழுவும் தமிழ்நாடு – கேரளா அரசுகளின் செயலாளர்கள் நிலையில் அமைக்கப்படலாம் என முடிவு செய்யப்பட்டது.

இம்முடிவின்படி, பரம்பிக்குளம்–ஆழியாறு திட்டம் குறித்த குழுவில் டாக்டர் க. மணிவாசன், இ.ஆ.ப., பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர், திரு. ஆர். சுப்பிரமணியன், காவேரி தொழில்நுட்பக் குழுமத்தலைவர், டாக்டர் ஆர். இளங்கோவன், பொதுப்பணித் துறையின் ஓய்வு பெற்ற சிறப்பு தலைமைப் பொறியாளர், திரு. பொ, முத்துசாமி, கண்காணிப்புப் பொறியாளர் மற்றும் திருமதி. ஏ. முனாவர் சுல்தானா, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் கண்காணிப்புப் பொறியாளர் ஆகியோரையும், பாண்டியாறு–புன்னம்புழா திட்டத்திற்கான குழுவில் டாக்டர் க. மணிவாசன், இ.ஆ.ப., பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர், திரு. ஆர். சுப்பிரமணியன், காவேரி தொழில்நுட்பக் குழுமத்தலைவர், திரு ஈ. தமிழரசன், ஓய்வு பெற்ற பொதுப்பணித் துறை

தலைமைப் பொறியாளர், திரு. எஸ். சிவலிங்கம், கண்காணிப்புப் பொறியாளர் மற்றும் திருமதி. ஏ. முனாவர் சுல்தானா, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் கண்காணிப்புப் பொறியாளர் ஆகியோரையும் தமிழ்நாட்டின் சார்பில் இக்குழுக்களின் உறுப்பினர்களாக நியமித்து அரசு இன்றைய தினம் (17.10.2019) ஆணை வெளியிட்டுள்ளது.

**டாக்டர் க. மணிவாசன்**
**அரசு முதன்மைச் செயலாளர்**
**பொதுப்பணித் துறை**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**